# மன்னா

பொழிவு 10 | கார்த்திகை 1997 | குவிப்பு 31

மன்னார் மறைவட்ட வெளியீடு




ஆண்டவரே என் ஒளி,
ஆண்டவரே என் மீட்பு;
நான் யாருக்கு அஞ்ச வேண்டும் ?
(சங் .26:1)

# மனிதம் வாழ ஏழைகள் மட்டில் அன்புள்ளோர் தேவை

மன்னார் மறைமாவட்ட புனித வின்சன் டீ போல் சபையினர் தமது சபையின் பாதுகாவலராம் புனித வின்சன் டீ போல் திருவிழாவை புரட்டாதி மாதம் 27ம் திகதி மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள். வங்காலை, மன்னார், பள்ளிமுனை, தாழ்வுபாடு, பேசாலை, தலைமன்னார். ஆகிய ஆறு பங்குகள் இதில் கலந்து கொண்டன.

மன்னார் மறை மாவட்ட ஆயர் மேன்மை தங்கிய இராயப்பு யோசேப் அடிகளார் தலைமையில் சபையின் ஆன்மீக இயக்குனர் அருள் திரு எமிலியானூஸ் பிள்ளை அடிகளுட்பட நான்கு குருக்கள் திருப்பலி நிறைவேற்றினார்கள். 1997 ம் ஆண்டு ஆவணி மாதம் 24 ம் திகதி புனித வின்சன் டீ போல் சபையின் ஸ்தாபகர் பிறெட்றிக் ஓசான்னம் அவர்களுக்கு முக்தி பேறு பட்டம் அளித்த அந்த மகிழ்ச்சிகரமான நிகழ்வினை சிறப்பிக்கும் முகமாகவும் இறைவனுக்கு நன்றி கூறி இந்த விழாவை சகல பந்திகளும் ஒன்றிணைந்து கொண்டாடினார்கள்.

திருவிழா திருப்பலி முடிந்ததும் ஆயர் தலைமையில் பொதுக் கூட்டமும், ஒன்று கூடலும் நடைபெற்றது. ஆரம்ப செபத்துடன் கூட்டம் ஆரம்பமானதைத் தொடர்ந்து ஆன்மீக இயக்குனரர் வரவேற்புரை வழங்கப்பட்டது திருப்பலியிலும் பொதுக் கூட்டத்திலும் ஆயர் தமது மறையுரையில் பொது நிலையினரின் செயற்பாடுகளில் முக்கியமான ஒன்று புனித



வின்சன் டீ போல் சபையினரின் பணி என வற்புறுத்திக் கூறினார். மேலும் அவர் தொடர்ந்து கூறியது. ஏழை மனிதர்கள் நிறைந்த இந்த உலகத்தில் வின்சன் டீ போல் சபையின் பணியானது உண்மையாகவே வாழ்க்கையோடு இணைந்தது. அன்று பிரான்சிலே போர்க் கால சூழ்நிலையிலேயே இந்தச் சபையை பிறெட்றிக் ஓசன்னம் ஆரம்பித் தார்கள். போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, பொருளாதார நெருக்கடியினால் வறுமைக் கோட்டிற்குக் கீழ் தள்ளப்பட்ட மக்களுக்கு உதவிக்கரம் நீட்ட, அன்புப் பணிபுரிய தமது சேவையை அர்ப் பணித்தார். இந்த சபை மூலமாக நமது நாடுகளிலும் தற் போதைய போர்க்கால சூழ்நிலையிலே, அகதிகளாகவும், அனாதைகளாகவும், விதவைகளாகவும், பல்வேறுபட்ட தாக்கங்களுக்கும், யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டும் உள்ள மக்களுக்கு இந்த சபையின் பணி தேவையாக உள்ளது. பிச்சை எடுத்து பிச்சை கொடுப்பது, இது எல்லோராலும் முடியாது. ஆனால் இப்பணிக்காக அழைக்கப்பட்டுள்ள புனித வின்சன் டீ போல் சபையினர் இறைவனின் விசேஷ அழைப்பைப் பெற்றவர்கள் முத்திப் பேறு பெற்ற பிறெட்றிக் ஓசான்னம், அன்னை திரேசா போன்றவர்கள் நமக்கு முன்னோடியாக வாழ்ந்து காட்டியுள்ளார்கள். மனிதம் வாழ்கின்ற தென்றால் ஏழைகளின் மட்டில் அன்புள்ளவர்கள் வாழ்வதால் தான்.

ஆனால் தற்போது இச்சபையானது நமது மறைமாவட்டத்தில் இயங்குகின்றதா? என்பது பெரிய கேள்விக் குறியாக இருக்கின்றது. குறுக்கு வழியில் பணம் சம்பாதிப்போர், தலைக்கு மேல் நெருப்பை குவிப்பவர்கள், நேர்மையற்ற மனிதர்கள் நிறைந்துள்ள இந்த சமுதாயத்தில் ஊழியப் பணி செய்பவர்கள் துறவிகள் மட்டுமல்ல குடும்பத்தில் இருப்பவர்களும்தான். பிறெட்றிக் ஓசான்னம் கூட ஒரு குடும்பத்தின் தலைவனாக இருந்தும் சமூகப் பணி புரிந்தவர். ஆலய மேய்ப்புப் பணியில் உள்ள பல குழுக்கள் சமூகமாகச் சேரும் போது பொறுப்பான குழு அமையும். உருவாக்கத்தை நாம் இதிலிருந்து பெற்றுக் கொண்டு நாமும் செயல்பட முனைய வேண்டும். வின்சன் டீ போல் சபையினர் தாங்கள் பணி செய்வதோடு மட்டும் நின்று விடாது மற்றவர்களையும் ஊக்குவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறி இதுதான் மேலான பணி, சபைகளில் உண்மையான தகுதியுள்ளவர்களைத் தலைவராகத் தெரிய வேண்டும் என்றும், தலைவர்கள் முயற்சியும், கடமை உணர்ச்சியுமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்துக் கூறினார். பொறுப்பான தலைவர்கள், ஊழியர்கள்,பங்கு மட்டத்தில், ஆலயங்களில், தெரிவு செய்யப்பட்டு மத்திய சபைக்கு அனுப்பப்படவேண்டும். புனித வின்சன் டீ போல் சபையினரின் முக்கியமான பணியான பிடி அரிசி வாங்கும் பணியை மிகவும்வற்புறுத்திக் கூறினார்.

ஆயரின் உரைக்குப் பின் தேநீர் விருந்தும், சிறிய கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. கலை நிகழ்ச்சிகள், புனித வின்சன் டீ போல் சபையினரின் பணியான அயலானுக்கு, ஏழைக்கு உதவி செய்யும் பாணியில் அமைந்தது. பிறெட்றிக் ஓசான்னம் புகழ் பாடி கவிதைகளும், பாடல்களும் இடம் பெற்றன.

ஆன்மீக இயக்குனர் தமது உரையில் செயலிழந்த நிலையில் இருக்கும் பந்திகள் செயல்பட வேண்டும். திருமணமானவுடன் சபையை விட்டு விலகிப் போதல் முறையல்ல. பிறெட்றிக் ஓசான்னம் இதற்கு ஓர் உதாரணம். உற்சாகத்துடன் பணியில் ஈடுபட வேண்டும். பங்குத்தந்தையர்களில் தங்கியிராது நாமாக செயல்படக் கூடியவர்களாக இருக்க வேண்டும். ஒரு பங்கிலுள்ள பந்தியைச் சேர்ந்தவர்கள், மற்ற பந்திலுள்ள பந்தியை சந்திப்பதன் மூலம் பணியை விருத்தி செய்யமுடியும். புதிய தலைவர்களை சபைகளில் உருவாக்க வேண்டும் எனவும் கூறினார். மத்திய சபையின் செயலாளரினால் நன்றியுரை கூறப்பட்டது.

இறுதி சபை செபத்துடனும், ஆன்மீக இயக்குனரின் ஆசியுடனும் திருவிழா ஒன்று கூடல் நிறைவேய்தியது.

## மன்னார் விடுதிச்சாலையில் அன்பியம்

2000ம் ஆண்டில் கிறிஸ்து பிறப்பின் யூபிலி விழாவிற்கு அத்திவாரம் இடும் இக்காலகட்டத்தில், விடுதிச்சாலையில் வாழும் நாமும் எங்கள் அன்பியத் செயற்பாடுகளில் எம் ஆயரின் படிப்பினைக்கிணங்க அன்பு அருட்சகோதரியின் வழிநடத்துதலில் அடிஎடுத்து வைக்கின்றோம்.

70 பேராய் வாழும் நாம் நான்கு குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு சனிக்கிழமையும் ஆசிப்பா படிமுறைமூலம் எம் வாழ்வை சீர்தூக்கி பார்த்து விசுவாச ஒளியில் புதிய விடியலாக பழமையைக் களைந்து புதுமையைப் போர்த்துக் கொள்கின்றோம். அந்நாளில் கேட்கும் இறைவார்த்தைக்கிணங்க பெற்றுக்கொண்ட முத்தை எம் விசுவாச வாழ்விக்கு அந்த வாரம் முழுதும் எம்மைப் புதுப்பித்துக்கொள்கின்றோம்.

இச் செயற்பாட்டின்மூலம் எம் குடும்ப உறவும் அன்பும் கட்டியெழுப்பபடுகின்றது. முற்று முழுதாக ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தை செயற்பாட்டின் மூலம் எம்வாழ்வாக்கிக் கொள்கின்றோம். எம் ஒவ்வொரு குழுக்களும் விடுதிச்சாலையில் உள்ள பொதுப் பணியில் ஈடுபடுகின்றோம். எங்கள் குட்டிக்குடும்ப அன்பிய வாழ்வின் மூலம் 2000ம் ஆண்டு கிறிஸ்து பிறப்பின் யூபிலி விழாவில் பூரண குழந்தைகளாக பிரசவமாவோம் என்பதில் ஜயமில்லை

ஞா. நீல்மெரின் குரூஸ்
திருக்குடும்ப கன்னியர் மாணவிகள் இல்லம்
மன்னார்.

## ஊழல்களை ஆதரிப்பவன் சமூகத்துரோகி

''நாடு இன்று அமைதி இழந்து மக்கள் அல்லலுறும் இவ்வேளையில் எவனொருவன் ஊழல்களை ஆதரிக்கின்றானோ அவன் சமூகத்துரோகி. ஒவ்வொரு மனிதனும் அன்புச்சமூகத்தை கட்டியெழுப்ப அழைக்கப் பட்டவனாகையால் அவன் தனக்கென கொடுக்கப்பட்ட பணியை மறந்து ஊழல்களை ஆதரிப்பவனாகில் அவன் சுயநலவாதியாகச் செயற்பட்டு சமூகத்தை அழித்தொழிக்கும் சமூகத் துரோகியாகச் செயற்படுகின்றான்" என மன்னார் ஆயர் அதிவந்தனைக்கரிய இராயப்பு யோசேப் ஆண்டகை அவர்கள் குறிப்பிட்டார்.

பேசாலை காட்டாஸ்பத்திரி கிராமத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள அன்னை வேளாங்கன்னி ஆலயத்தை ஆசிர்வதித்து திறந்து வைத்தப்பின் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலியின் மறை உரையின் போது ஆண்டகை அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வாலயத்தின் வளர்ச்சியைச் சிந்திப்போமானால் கிட்டதட்ட நான்கு வருடங்களுக்கு முன்னதாக கணிசமான அளவில் கத்தோலிக்கர் வாழும் காட்டாஸ்பத்திரியில் கத்தோலிக்க தேவாலயம் இல்லாததை உணர்ந்த அவ்வூர் மக்கள் அப்பொழுது பேசாலைப் பங்குத்தந்தையாக இருந்த அருட்தந்தை C.S. குரூஸ் அவர்களிடம் சென்று வேண்டுகோள் விடுத்தனர். மக்களது வேண்டுகோள் நியாயமானது என்பதை உணர்ந்த அருட்தந்தை அவர்கள் ஊராரின் துணைகொண்டு ஊரின் மத்தியில் சிறு காணித்துண்டு ஒன்றை விலைக்கு வாங்கி அதில் குடிசைக் கோயிலை அமைத்து வேளாங்கன்னி திருச்சுரூபத்தை ஸ்தாபித்து வைத்தார். வாராந்தம் வியாழக்கிழமைகளில் பெருமளவில் பக்தர்கள் அன்னையிடம் சென்று வருவதை அவதானித்த C.S. குரூஸ் அடிகள் மாதமிருமுறை வியாழக்கிழமை மாலையில் திருப்பலி நிறைவேற்றத் தொடங்கினார். அடிகளாரைத் தொடர்ந்து பேசாலைப் பங்குத்தந்தையாக பொறுப்பேற்ற அருட்திரு P. யேசுறாஜா அடிகள் அவ்விடயத்தில் அழகிய ஆலயம் ஒன்று அமைக்கத்திட்டம் போட்டார். மனதிலே உதித்த இத்திட்டம் இன்று நவீன வடிவில் அமைக்கப்பட்ட ஆலயமாக காட்சியளிக்கின்றது. ஆயரினது பண உதவியுடனும், பக்தர்களினது பல உதவிகளுடனும் மேலதிகக் காணியை வாங்கி அதிலே திராட்சை இரசக்கிண்ண வடிவில் அழகிய ஆலயத்தை அமைத்த பெருமை எமது P. யேசுறாஜா அவர்களையே சாரும். பண உதவி செய்த எமது ஆயருக்கு நன்றிகள் அத்தோடு பேசாலை வாழ் இறைமக்களும் தமது தாராள குணத்தை பணம், பொருள், உடலுதவி மூலமும் பேசாலை புனித ஸ்நாபக அருளப்பர் இளைஞர் மன்றத்தினர் தமது உதவியை வெவ்வேறு வகையிலும், காட்டாஸ்பத்திரி வாழ் கிறீஸ்தவர்களோடு அவ்வூர் இந்து மத சகோதரர்களும் இணைந்து அனைத்துக் கருமங்களிலும் ஈடுபட்டமை பாராட்டுக்குரியதாகும்.

புரட்டாசித் திங்கள் 21ம் ஆம் நாள் இடம்பெற்ற இவ்வைபத்தின் கூட்டத்திருப்பலியில் ஆயருடன் இணைந்து அருட்தந்தை C.S. குரூஸ், அருட்தந்தை S. அன்ரன் ஜெயபாலன் குரூஸ், மற்றம் பங்குத்தந்தை P. யேசுறாஜா உதவிப் பங்குக் குருக்களாக அருட் தந்தையர்கள் B.S. மரியதாசன், க. அருள்பிரகாசம் ஆகியோரும் இணைந்து ஒப்புக் கொடுத்தனர், பங்குத்தந்தை அவர்கள் தமது குறிப்பில் ஒவ்வொரு வியாழக் கிழமையும் மாலையில் திருப்பலி நிறைவேற்ற ப்படுமெனவும் மாதத்தின் முதல் வியாழன் மாலையில் நோயாளரை குணமாக்கும் வழிபாடும் நற்கருணை ஆசிர்வாதமும் இடம் பெறுமெனவும் குறிப்பிட்டார்.

தகவல்
*செல்வன் சூ. புறுனோ டயஸ்*
*பேசாலை.*

யூபிலி
கி.பி 2000

**இயேசுவே ஆண்டவர் என்று முழங்கி சாட்சியாய் வாழ்ந்திடுவோம்**




பாசம் பரிதாபம் இவற்றின் விளைவினால் பாவம் கூட பரிசுத்த மாக்கப்படும் நிலைமைகள் இன்றைய சமுதாயத்தில் வெளிப்படையாகத் தெரிகின்ற உண்மைகள. பாவம் எது பரிசுத்தம் எது என்று அடையாளம் காணமுடியாதவாறு உலகம் தன் கண்களை இறுக மூடிக்கொண்டிருக்கின்றது. தூய வாழ்வு வாழ்வது தான் மனித நடத்தைக் கோலங்களின் சிறப்பம்சம் என்ற வரையறைகள் எல்லாம் இன்று மாறிவிட்டன. இவற்றின் மத்தியிலே தான் திருச்சபை அனைத்துப் புனிதர்களின் விழாவை இவ்வாண்டும் நினைவு கூர்ந்து கொண்டாடுகின்றது.

ஏன் இந்தப் புனிதர்களுக்கு ஒரு விழா. புனிதர்களுக்கு வணக்கம் கொடுப்பது தவறு, அவர்களும் சாதாரண மனிதர்கள் தானே அப்படியிருக்க ஏன் அவர்களுக்கென்று சிறப்பிடம் என்ற விளக்கம் வேண்டி நிற்கும் சிந்தனை அலைகள் முட்டிமோதி உள்ளத்தை உலுப்புகின்றன.

விசுவாசத்தை விவாதப் பொருளாகவோ, அன்றேல் வியாபாரப் பொருளாகவோ ஆக்காமல் புனிதர்களின் விழாவின் உள் சென்று நோக்குவோமானால்; இவர்கள் தங்கள் வாழ்வில் பரிசுத்தத்தை வேறாகவும், பாவத்தை வேறாகவும் சரியான நோக்கில் இனங்கண்டு வாழ்ந்தவர்கள். உடல்,பொருள்,ஆவி அத்தனையிலும் தூய்மையின் இரகசியத்தை வெளிப்படுத்தியவர்கள். ஆகவே இவர்கள் நமக்கெல்லாம் சிந்திக்க, செபிக்க, வாழ சில இறையுண்மைகளை வெளிப்படுத்தி விட்டுச் சென்றிருக்கின்றார்கள் என்ற உண்மையொன்று நமக்குக் கிடைக்கின்றது. மீண்டவர்கள் தங்களுடைய ஆடைகளைச் செம்மறியின் இரத்தத்தில் தோய்த்து வெண்மையாக்கிக் கொண்டார்கள் (தி.வெ. 7:14) புனிதத்தின் உட்கூறுகள் இவர்களின் வாழ்வோடு கரைந்துள்ளதால் நாம் இவர்களைப் புனிதர்களௌன்கின்றோம். இன்னொரு வகையில் கூறினால் விசுவாசத்தை உறுதிப்படுத்த துணைநிற்கும் ஊக்கச்சக்திகள் இவர்கள்.

அன்பிய வாழ்வின் அடித்தளமும் புனித வாழ்வோடிணைந்ததே. உறவும் பகிர்வும் செபமும், செயற்பாடும், இறைவார்த்தையும், சிந்தனையும் ஒருங்கே இணைந்திருந்தால் அதுவே துய்மை என்னும் அன்பிய வாழ்வாகின்றது. அன்பியம் என்றும் எமது இலட்சியப் பயணம் இலக்கை அடைய தூய்மை அவசியமாகின்றது. புனிதர்களின் வாழ்வைப் பின்பற்றி மனிதத்தை புனிதமாக்குவோம். உலகியல் போக்கினால் உருமாறிப் போய்விடாது உண்மையான ஆன்மீகத்தைப் பற்றிப்பிடித்துக் கொள்ளுவோம். பாவத்தையும், பரிசுத்தத்தையும் இனங்கண்டு அகற்றவேண்டியதை அகற்றி, அணிய வேண்டியதை அணிந்து கொள்வோம்.

அன்புடன்
ஆசிரியர்.



## உதயம் தரும் இல்லம்

மூவிரண்டு மாதங்கள் முடிவடைந்த நாளிகையில்
திரும்பிப் பார்க்கின்றேன் வாழ்வுதரும் இல்லத்தை
கற்றார் கல்லார்
தாழ்ந்தோர் உயர்ந்தோர்
ஏழை எளியவர் பல்தேவைக்கருதி
காலடி வைப்போர் அனைவரும்
கண்ணாரக்கண்ட காட்சி
இன்றைய கணணி யுகத்தில் இளைஞரும் யுவதியரும்
கண்காணாத் தேசத்திற்கு காலெடுத்து செல்லாது
காலடியில் கணணியைக் கற்றிடச் செய்து
கணணிக் கல்வியில் கண்ணுள் ளோராய் வாழ
கரை சேர்ந்த உதயம்

ஏழையர் எளியவர் ஏக்கத்தை அறிந்து
அகதிகள் அனாதைகள் அவதியை உணர்ந்து
அன்புடன் உணவும் உடையும் அளித்து
பண்புடன் நடத்தும் பாசமிகு உதயம்

வேலையின்றி வீட்டில் வசித்த இளம் பெண்ளுக்கு
வேலை வாய்ப்பளித்து வீட்டைக் காக்கச்செய்து
விடிவு வழிக்கு வித்திட்ட உதயம்.

தேவை யென்று தேடிச் செல்லும் அனைவருக்கும்
தேவையறிந்து செய்வது போல்
குறையெல்லாம் தீர்க்கும் நிறைவான உதயம்.

வாழ் வளிக்கும் வள்ளல் போல் வாழ்நாளெல்லாம்
வாழவைக்கும் வாழ்வுதயமே
வாழ்க வாழ்க உன் நாமம்
வளர்க வளர்க உன் பணி.

க.மேகலா
மன்னார்.

## நம் உள்ளமே ஆண்டவரின் திருக் கோயில்



அன்பு நண்பர்களே நீங்கள் எல்லோரும் இறைபற்றுக் கொண்டவர்கள் ஆயினும் உலகில் சில பேர் கடவுள் எங்கே அவரைக் காட்டு; கடவுளே இல்லை என்று பிதற்றக் கூடும் பிதற்றுபவர்களைத் தான் நாஸ்திகர்கள் என்கின்றோம்.

இதற்கு ஒரு குட்டிக் கதை கூறுகிறேன். ஒரு சமயம் ஒரு நாஸ்திகன் தன் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தான். அவன் வீட்டிற்குச் சற்றுத் தொலைவில் ஒரு கோயில் இருந்தது. அவ்வாறு அவன் வீடு நோக்கி நடந்து செல்லும் போது கோயில் மணி ஒலித்தது. அந்த மணியின் ஓசையைக் கேட்டதும் ஒரு சாதாரண குடியானவன் வெகு விரைவாய் கோயிலுக்குப் போகக் கிளம்பினான். இதைப் பார்த்த நாஸ்திகன் அந்த சாதாரண குடியானவனிடம் '' நீ ஏன் இவ்வளவு பரபரப்பாகிறாய் ? " என்று கேட்டான் " உடனே குடியானவன் நாஸ்த்திகனை பார்த்து " கோயில் மணி ஓசையை கேட்டேன் எனவே கோயிலுக்குச் செல்லப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன் " என்றான். " கோயிலுக்கா ? ஏன் அங்கு போய் என்ன செய்வாய் " இது நாஸ்திகனின் கேள்வி. " கோயிலுக்குப் போய் கடவுளிடம் செபிப்பேன் அவர் எனக்கு செய்து வரும் நன்மைகளுக்காக நன்றி சொல்வேன் என் தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்பேன். எனக்குத் தேவையானதை அவர் திருவுளம் இருந்தால் அருளும் படி கேட்பேன்" என்றான் ஏழைக் குடியானவன்.

"அது சரி உன் ஆண்டவர் பெரியவரா ? சிறியவரா ? " என நாஸ்த்திகன் கேலியாகக் கேட்டான் "கடவுள் இந்த விண் மண் அனைத்தையும் விட பெரியவர் ஆனால் அதே நேரத்தில் என் உள்ளத்திலே தங்கி உறவாட விரும்பும் அளவிற்கு எளியவர்,இரக்கம் உடையவர்,அன்புள்ளவர், கருணைமிக்கவர் இவ்வாறு ஏழைக் குடியானவன் நாஸ்திகனுக்குக் கூறினானாம்.

ஞா.மெற்றில்டா ஷாமினி
பொன்தீவுக் கண்டல்.

## நீதியின் பொழிவுகள்

போர்க்கருவிகளை உற்பத்தி செய்யாத நாடு பேறுபெற்றது.
ஏனெனில்,அந்த நாடு பேரன்பு மிக்கது என்று போற்றப்படும்.

நாடு பிடிக்கும் நோக்கமில்லா நாடு பேறுபெற்றது.
ஏனெனில் அந்த நாடு நல்லவர்களைக் கொண்டதென்று போற்றப்படும்.

உணவுப் பண்டங்களை சமுத்திரத்தில் கொட்டாத நாடு பேறுபெற்றது.
ஏனெனில், அந்தநாடு பெரிய உபகாரி என்று போற்றப்படும்.

மனச்சண்டைகள் இல்லாத நாடு பேறு பெற்றது.
ஏனெனில் அந்தநாடு சமாதானம் நிறைந்ததென்று போற்றப்படும்.

இனவெறி இல்லாத நாடு பேறுபெற்றது.
ஏனெனில், அந்தநாடு மன நலம் மிக்கவர்களின் நாடு என போற்றப்படும்.

நிறவெறி இல்லாத நாடு பேறுபெற்றது.
ஏனெனில் அந்தநாடு சகோதரத்துவமுடைய நாடு என்று போற்றப்படும்

பிறநாட்டின் செல்வங்களை அபகரிக்காத நாடு பேறுபெற்றது.
ஏனெனில் அந்த நாடு யோகிகளின் நாடென போற்றப்படும்

தீண்டாமை இல்லாத நாடு பேறுபெற்றது.
ஏனெனில் அந்த நாடு தேவர்கள் நாடு எனப்படும்.

பசிபிணி இல்லாத நாடு பேறுபெற்றது.
ஏனெனில் அந்த நாடு சொர்க்கம் என்று போற்றப்படும்.

உல்லாசப் பிரயாணத்துறையைத் தடை செய்தநாடுபேறுபெற்றது.
ஏனெனில் அந்த நாடு ஆன்மீகம் மிக்கதென்று போற்றப்படும்.

நீதியின் மேல் பரிதாபம் உள்ளவார்களும் நீதிக்காகத் துன்புறுபவர்களும், நீதிக்காகப் போராடுபவர்களும் வரலாற்று அத்தியாயங்களில் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்கள் இனிமேலும் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். ஆனால் உலகில் நீதி வெற்றிபெற்று விட்டதா ? நீதி வெற்றி பெற்றதாகத் துணிந்து கூறலாமா ?

"நேர்மை,பால் வெளியில் குடியிருக்கும்.

நீதியானது செழிப்பான வயல் வெளிகளில் வீற்றிருக்கும்

நீதியால் விளையும் பயன் சமாதானம்

நீதியின் பயன் அமைதியும்

என்றென்றும் நீடிக்கும் அச்சமில்லாத வாழ்வுமே

சமாதானத்தின் இருப்பிடத்திலும்

அச்சம் அறியாத கூடாரங்களிலும்

அமைதி நிறைந்த இல்லங்களிலும்

நம் மக்கள் குடியிருப்பார்கள்

என் பிள்ளைக்கு நாளைக் காலை உணவுக்காக என்னிடம் கையிருப்பில் பொருள் உள்ளபோது அண்டை வீட்டுப் பிள்ளைக்கு இரவு உணவுக்கான ஆதாரம் இல்லாத நிலையில் சமாதானம் என்பது என்ன? சகவாழ்வு,சகோதரத்துவம் என்பது என்ன? ஏழை இலாசரும் செல்வச்சீமானும் அக்கம்பக்கம் வாழும் போது அமைதி என்பது என்ன? இரு குழுவினர்களும் ஆட்சி செலுத்தும் போது அச்சம் இல்லாத வாழ்வு என்பது என்ன? கடன் பத்திரங்களை மாற்றிக் கள்ளக்கணக்கு எழுதி அநீதி செல்வத்தைத் தேடித் கொண்ட பிரமாணிக்கமற்ற ஊழியர்கள் நிறைந்த சமுதாயத்தில் வயலிலே அறுவடை செய்பவர்களின் கூலியை பிடித்துக் கொண்டு தங்கள் களஞ்சியங்களை நிரப்பிக் கொள்ளும் பணக்காரர் விவசாயிகள் போன்றவர்கள் வாழும் சமுதாயத்தில் அமைதி சமாதானம் நீதி இவைகளை எங்கே பெறுவது?

அச்சமில்லாத வாழ்வு என்பது நீதியின் இராட்சியத்தில்தான் உருவாகமுடியும். அநீதியான சமுதாய வடிவத்தைக் கண்முன் நிறுத்துவதோடு, நீதியான சமுதாயத்தை உருவாக்குவதற்கு என்ன செய்யவேண்டும் என்பதையும் விவிலியம் அழுத்தமாகச் சொல்கின்றது.

"பள்ளத்தாக்குகள் எல்லாம் நிரப்பப்படுக

மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படுக

கோணலானவை நேராகவும்

கரடுமுரடானவை அழுத்தமான வழிகளாகவும் ஆக்கப்படுக "
"மனிதரெல்லாம் கடவுளின் மீட்பைக் காண்பர்"

இத்தகைய ஏற்றத்தாழ்வுகளை, அவலங்களை எப்படி மாற்ற வேண்டும் பள்ளங்கள் நிரப்பட வேண்டும் என்கின்றது விவிலியம். பள்ளத்தை நிரப்ப வேண்டுமானால் மேட்டு நிலத்தை வெட்டித்தானே சமம் செய்ய முடியும்? சமுதாயத்தில் ஓர் இடத்தில் மலைபோல் குவிந்திருக்கும் செல்வத்தை சமுதாயத்தில் உள்ள அனைவரும் பகிர்ந்து கொள்வதற்கான நிலைமையைச் சமுதாயத்தில் உருவாக்கவேண்டும்.

"விண்ணரசு அண்மித்துவிட்டது
மனம்திரும்பி ஏற்புடையதைச் செய்யுங்கள்
இரண்டு அங்கியுள்ளவன் இல்லாதவனுக்கு
ஒன்று கொடுக்கட்டும். உணவுள்ளவனும்,
நிலமுள்ளவனும் , வீடுகள் உள்ளவனும்
அப்படியே செய்யட்டும்" என்பது
விவிலியத்தின் வேண்டுகோள்.

கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும்
விசுவாசமுள்ளவன் செயலில் காட்டட்டும்
அப்போது நீதியின் அரசு நிலைபெறும்.

செபமாலை மேரி
திருக்குடும்ப கன்னியர் மாணவியர் இல்லம்
மன்னார்.

# மன்னாவே நீ வாழ்க!

மோ. மாற்கு யேசுதாசன்
மன்னார்.

இறைகுலமாகிய இஸ்ராயேல் மக்கள் அன்று வனாந்திரத்தினுடாக வாக்களிக்கப்பட்ட பூமிக்கு வழிநடத்திச் செல்லப்பட்டபோது பசி தாங்க மாட்டாதவர்களாக மோயீசனுக்கு எதிராகக் கிளம்பினார்கள். அவ்வேளை அவர்களின் முரட்டுத் தனத்தைப் பார்த்து அவர்களைத் தண்டிக்காது எம்வானகத் தந்தை அவர்களுக்கு மன்னா என்ற உணவை விண்ணிலிருந்து பொழிந்தார். அவர்களும் வயிறார உண்டு நிறைவு பெற்றார்கள்.

நாம் செய்து கொண்டிருக்கும் நீண்டதோர் பயணத்தில் இன்று புற்றீசல்களாக; நேற்றைய மழைக்கு முளைத்த காளான்கள் போல இறைமக்களைச் சிதறடிக்க போலித் தீர்க்கதரிசிகளும்; வீட்டுக்கு வீடு வாசல்படி என்பது போல பார்த்த இடமெல்லாம் புதிய புதிய போதனைகளும் மலிந்து மக்களை ஏமாற்றி இறை விசுவாச வாழ்வை விறகவும், வாங்கவும் தயங்காத கடின இதயம் படைத்த ஏமாற்றும் மக்கள் மத்தியிலே பெரும் சவால்களையெல்லாம் எதிர்நோக்கி எதிர் நீச்சல் போடத் தயங்காது நிமிர்ந்து நின்று கிறீஸ்துவின் சாட்சிகளாக வீறுநடை போட எம் ஆன்மபசி போக்கிப் புத்தாக்கம் அளிக்கும் அருமருந்தாக இதழ் விரித்து வருகின்ற மன்னாவே நீ வாழ்க !!

யானைக்குத் தும்பிக்கை மனிதனுக்கு நம்பிக்கை என்பதற்கொப்ப இறுதியில் மரியாளின் மாசற்ற இருதயமே வெற்றி கொள்ளும் என்ற நம்பிக்கையுடன் மக்களை வழிநடத்த மன்னாவே விரைந்து வா !!

செபத்தில் நிலைத்து நில் எம் மீட்பரான யேசு பிரானின் உத்தானத்தின் பின்னர் வளர்ந்து வந்த ஆதித்திருச்சபையினர் எல்லோரும் '' அப்போஸ்தலரின் படிப்பினையைக் கேட்பதிலும் நட்புடன் உறவாடுவதிலும், அப்பம் பிட்குதலிலும்; செபிப்பதிலும் நிலைத்திருந்தார்கள். " (அ.ப. 2:42 ) '' நாடோறும் தவறாமல் ஒரே மனதாய்க் கோவிலினில் கூடினர் ; வீடுகளில் அப்பத்தைப் பிட்டு, மனமகிழ்வோடும் கபடற்ற உள்ளத்தோடும் உணவைப் பகிர்ந்து கொண்டனர். இங்ஙனம் கடவுளைப் புகழ்ந்து வந்தனர். " ( அ.ப.2:46 ) இந்த அன்பிய வாழ்வு இன்றும் எம்மத்தியில் சிதைந்து பாதை தவறி எங்கும் எதிலும்; நான், எனது என்ற சுயநலத்திற்கு அடிமையாகி அழிவுப் பாதையில் சென்று விட்ட எம்மை மீண்டும் அந்த அன்பிய வாழ்வின் பாதையில் வழி நடத்தி அதன் மூலம் இறையன்பும், பிறரன்பும், நிலையான சக்தியும் சமாதானமும் நிறைந்த அமைதி வாழ்வுக்கு செல்ல உன்பணி பெருகட்டும் !!!!

ஆல் போல் தழைத்து; அறுகுபோல் வேரூன்றி சாலவே பட்சியெல்லாம் தங்கிக்களைப் பாறி, இளைப்பாறி நிற்கும் பெருவிருட்சமாகி அந்த நிழலிலே அன்பிய சமூகம் ஆறுதலடைந்திட ; அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு என்று கூறிய எம்பெருமான் யேசுவின் விருப்பிற்கேற்ற விளைச்சலை அறுக்கத்தகுந்த பணியாளர்களை உருவாக்கும் தொட்டிலாகவும் ; நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழகம் என்றது போன்று சீரிய, வீரிய விசுவாச சாட்சிகளான பணியாளர்களை உருவாக்கும் உத்தம குடும்பங்களைக் கொண்ட அன்பிய சமூகமாகவும் பயணஞ் செய்யும் இறைமக்களை வழிநடத்தும், ஊக்குவிக்கும் உன் பணி தொடரட்டும்; வளரட்டும் என்றும் வாழ்த்துகின்றேன்.

# மனிதனின் இதயம் போல சமூகத்தில் இளைஞன்

'' பல விதமான ஊழல்கள், லஞ்சம் போன்றவைகள் எமது சமுகத்தில் பரவிவரும் இந்நாட்களில் சமூகத்தை அழிவுப்பாதையிலிருந்து காப்பாற்ற ஒவ்வொரு இளைஞனும் அயராது உழைக்க வேண்டும், மனிதனின் இதயம் போல் சமூகத்தில் இளைஞன் துடிப்பள்ளவனாக திகழ வேண்டும்" என மன்னார் ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசப் ஆண்டகை அவர்கள் மன்னார் மறைவட்ட இளைஞர்களுக்கான பாசறையை ஆரம்பித்து வைத்துப் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

மன்னார் மறைவட்டக் கத்தோலிக்க இளைஞர், யுவதிக்களுக்கான வருடாந்த ஒன்றுகூடல் புரட்டாசித்திங்கள் 19ம், 20ம் தினங்களில் மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் இடம் பெற்றது. இராணுவக் கடடுப்பாட்டிலுள்ள பதினைந்து பங்குகளில் இருந்தும் 375 உறுப்பினர்கள் இவ்வொன்று கூடலில் பங்கெடுத்தனர். தொடர்ந்து ஆண்டகை அவர்கள் பேசுகையில் ''எதற்கும் அடிமையாகாத சுதந்திரவாழ்வு வாழ,அன்புச்சமூகத்தை கட்டியெழுப்ப ஒவ்வொரு இளைஞனும் அயராது உழைக்க வேண்டும். சமுகத்தின் சீர்திருத்தத்திற்கான கனவுகாண வேண்டும்" எனக் கூறினார்.

ஆயரைக் தொடர்ந்து உரையாற்றிய மாவட்ட நீதிபதி திரு.திருநாவுக்கரசு அவர்கள்'' எந்த அளவிற்கு இளைஞர்கள் விறுவிறுப்புடன் செயற்படுகின்றார்களோ அந்த அளவுக்கு ஒரு சமூகத்தில் குற்றவாளிகளின் எண்ணிக்கை குறையும். இதற்கேற்ப இளைஞர்கள் ஒழுக்கத்துடனும் நிதானமாகவும் தியாகசிந்தையுடனும் நடந்து கொள்ளவேண்டியது அவசியம்" என வலியுறுத்தினார்.

மறுதினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய மன்னார் பேராலயப்பங்குத்தந்தை அருட்திரு எஸ்.கிறிஸ்ரியன் வாஸ் '' அன்புச் சமூகத்தை கட்டியெழுப்புவது இளைஞனின் கையில்தான் உள்ளது. எனவே இளைஞர்கள் சுயநலத்தை தூரஎறிந்து விட்டு அன்புச்சமூகத்தை கட்டியெழுப்ப முன்வரவேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார், தொடர்ந்து உரையாற்றிய தலைமன்னார் பங்குக்குரு வின்சன்ட் பற்றிக் அடிகளார் ''இளைஞர்களின் உள்ளம் எவ்விதம் அன்பைத்தேடி ஓடவேண்டும்" என அன்பின் தன்மையையும் மகத்துவத்தையும் பற்பல உதாரணங்களுடன் எடுத்துக் காட்டி விளக்கமளித்தார்.

இரண்டு தினங்களாக இடம் பெற்ற இப்பாசறையை மன்னார் மறைவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய இயக்குனர் அருட்திரு பி.யேசுறாஜா அவர்களும் உதவி இயக்குனர் அருட் திரு.S.விக்ரர் சோசை அவர்களும் ஒருமித்து செய்தனர். நிகழ்வின் முதல்நாள் ஆரம்பத்தில் இளைஞர்கள் அலங்கரிக்கப்பட்ட மைதானத்தில் இரண்டுவரிசைகளில் நிற்க ஆயரும்,நீதிபதி அவர்களும் மாலை அணிவிக்கப்பட்டு கொடிக்கம்பங்கள் நோக்கி அழைத்துவரப்பட்டனர். அனைவரும் கொடிக்கம்பங்களை சூழ்ந்துநிற்க ஆயரினால் பரிசுத்த பாப்பரசரது கொடியும் இயக்குனரினால் மறைவட்ட இளைஞர் ஒன்றியக் கொடியும் உயர்த்தப்பட்டது. அதனையடுத்து இளைஞர் ஒன்றியக்கீதம் இசைக்கப்பட்டது. அனைவரும் மண்டபத்தினுள் ஆசனங்களில் அமர்ந்ததும் சிறிய வழிப்பாடு நடைப்பெற்றது. அதனையடுத்து உறையாற்றிய ஒன்றிய துணை இயக்குனர் அருட்தந்தை விக்ரர் சோசை அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார், அதனையடுத்து பேசிய ஒன்றிய இயக்குனர் அருட்திரு பி.யேசுறைஜா அவர்கள் '' எம்மிடத்தில் இருந்தால்தான் ஏனையோருக்குக் கொடுக்கமுடியும், எனவே நாம் இவ்வாறான சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி பெறக்கூடியதை பெற்றுக்கொள்ள முயல வேண்டும்"எனக் கூறினார்.

முதல் நாள் மாலை இளைஞர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு கலைநிகழ்ச்சிகளை நடாத்தினர். இரண்டாவது தினம் அதிகாலையில் தியானமும் திருப்பலியும் இடம் பெற்றன.

தகவல்
சூ,யுறுனோ டயஸ்
பேசாலை.

# சுயரூபமில்லையா ?

வேதாகமம் போற்றும் மன்னாவே
வரலாறு வடித்த மன்னாவே
இஸ்ராயேல் மக்களின்
கொடுமபசி தீர்த்த மன்னாவே
ஆன்மிக மன்னாவே
மன்னார் மறைவட்டம்
வெளியிடும் மன்னாவே
உன்னை ஒரு கணம்
விழிக்கின்றேன்
''மன்னா" என்றழைக்க
உனக்கு ஒரு வடிவமில்லையா
ஆறிரண்டு வருடங்களை
எட்டப்போகும் மறைவட்டம்
உனக்கென சுயரூபம் தர
மறுக்கின்றதா?
காலத்திற்கு காலம் நீ
ஏன் உன் உருவை மாற்றுகின்றாய்
உனக்கென ஓர்
''இலச்சினை"
இல்லையா
மன்னாவை ஆர்வமுடன்
படிக்கும் எனக்கு
ஓர் ஏக்கம்
உன்னை விழிக்க வேண்டும்
உனக்காக குரல் எழுப்ப வேண்டும்
என்ற ''தாகம்"
இத்தாகத்தைக் கூட
நீ
சுமந்து வருவாயா ???
எதிர்பார்ப்பேன் மன்னாவே
உன் வடிவையும்
என் இதய வாஞ்சையையும்
எதிர்பார்பேன்
மறைவட்டம் உனக்குத்
தனி உருவைத் தரவேண்டும்
அந்த வடிவோடு நீ
இறைமக்கள் மத்தியில்
பவனி வர வேண்டும்
என ஏங்கும்

முத்தூர்.
தேவன்

---

முத்தூர் தேவா,
உங்களுக்கு எமது இதய நன்றிகளும் வாழ்த்துகளும்
உங்கள் ஆக்க பூர்வமான விமர்சனம் வரவேற்கத்தக்கதே
பயனுள்ள கருத்துக்களுக்கு எமது நன்றிகள்

மன்னா என்றழைக்க ஒரு வடிவுண்டு
அதற்கென ஒரு சுயரூபமும் உண்டு
மன்னாவுக்கென ஒரு அடையாளமும் உண்டு
மன்னாவுக்கென ஒரு தனித்துவத்தையும் கொடுத்துள்ளோம்
மேலோட்டப் பார்வை மன்னா மீது வேண்டாம்
வேரோட்டமாக பாருங்கள் புரியும்
குழந்தை பிறக்கும் போது இருப்பது போன்ற உருவ அமைப்போடுதான்
இருக்க வேண்டும் மென்ற ஆசை நியாயமானதா ?

குழந்தை வளர வேண்டும் ஆன்மீகத்தில், ஆளுமையில் அறிவில் அன்புறவில் குழந்தைப் பருவத்திலிருந்து பெரியவராக வளர்ந்து உருமாறுவதுதானே நியதி. அடிப்படையில் மாற்றமில்லை அமைப்பிலேதான் மாற்றம். அப்போதெல்லாம் மாற்றங்கள் நிகழ்கின்றனவே அதையொத்தே மன்னாவும் தன் வளர்ச்சிப் போக்கில் புதிய திருப்பங்களைச் சந்தித்த மன்னா அனைத்தையும் குறிப்பறிந்து தனக்கென ஒரு அடையாளத்தைப் பெற்றுள்ளது. இனி உங்கள் ஆசைகள்,தேவைகள்,தாகம்,ஏக்கம் அனைத்தும் சரி செய்யப்படும்.

அன்புடன்
ஆசிரியர்.

# வங்காலையில் விவிலிய மறைக்கல்வி வாரமும், ஆயரின் வருகையும்

சென்ற மாதம் 19ம் திகதி தொடக்கம் 26ம் திகதி வரை வங்காலைப் பங்கில் விவிலியம் மறைக்கல்வி வாரம் மிகவும் சிறப்பாக அருட்சியான முறையில் அனுஸ்டிக்கப்பட்டது.

கீழ்ப்பிரிவு மாணவர்கள், மத்திய பிரிவு மாணவர்கள், மேற்பிரிவு மாணவர்கள், இளைஞர்கள், பெற்றோர்கள் ஆகிய ஒவ்வொரு தரப்பினருக்கும் ஒவ்வொரு நாட்கள் ஒதுக்கப்பட்டு ஒவ்வொரு தரப்பினருக்கும் பொருத்தமான விவிலிய விளையாட்டுக்கள், பட்டிமன்றம், சிறப்புரைகள், விவிலியப் படக்காட்சிகள் ஆகியன ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. வங்காலைப் பங்கிலுள்ள பெரும்பாலான மக்கள் இந்நிகழ்ச்சிகளில் மிகவும் உற்சாகமாகப் பங்கெடுத்தனர்.

25ம் திகதி சனிக்கிழமை காலையில் மன்னார் ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசப் ஆண்டகை அவர்களினால் விவிலியக் கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது. விவிலியத்தோடு சந்பந்தப்பட்ட பல விடயங்கள் மாணவர்களாலும், பெரியவர்களாலும் உருவாக்கப்பட்டு பல படங்களாக, கைவண்ணங்களாக கண்ணைக் கவரும் வகையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. 26ம் திகதி மாலை விசேட கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்விற்கு மன்னார் ஆயர் அவர்களும், அருட்திரு .டலிமா மற்றும் வங்காலை இராணுவப் பொறுப்பதிகாரி ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். வங்காலைப் பங்குத்தந்தை அருள் பணியாளர் தேவசகாயம்பிள்ளை அடிகளாரும், உதவிப்பங்குத்தந்தை அருள்பணியாளர் நேசன் அடிகளாரும் மற்றும் மறையாசிரியர்களும் இந்நிகழ்வு சிறப்புற பெரிதும் உழைத்தனர்.

இந்த வாரத்தில் தான் மன்னார் ஆயர் அவர்களின் வங்காலைப் பங்குத் தரிசிப்பும் (Pastoral Visit ) இடம் பெற்றது. 25ம் திகதி வங்காலைப் பங்கிற்கு வருகை தந்த ஆயர் அவர்களை வங்காலை ம.ம.வித்தியாலய பாண்ட் இசைக்குழுவினர் வரவேற்று அழைத்து வந்தனர். பாடசாலையில் திருப்பலி நிறைவேற்றிய ஆயர் அவர்கள் மாணவர்களையும், ஆசிரியர்களையும் சந்தித்து உரையாடினார். மூன்று நாட்கள் வங்காலையில் ஆயர் தங்கியிருந்த வேளையில் பல்வேறு பத்திச்சபைகளில் உள்ள சிறுவர்கள், இளைஞர்கள், பெரியோர்கள் ஆகியோரைச் சந்தித்து உரையாடினார். இறுதியில் 27ம் திகதி காலையில் 100 மாணவர்களுக்கு உறுதிப்பூசுதல் என்னும் அருட்சாதனத்தை வழங்கினார்.

# மறைக்கல்வி ஆசிரியர்களுக்குப் பத்துக் கட்டளைகள்

தொகுப்பு-
மறையாசிரியர் G.மனோ
வவுனியா

**01**

## மாணவர்களை அறிந்து கொள்ளுங்கள் :

உங்கள் வகுப்பில் உள்ள ஒவ்வொரு மாணவரையும் நீங்கள் தனிப்பட்ட முறையில் அறிந்திருக்க வேண்டும் மேலெழுந்த வாரியாக பெயர்களை தெரிந்து வைத்திருத்தல் மட்டும் போதாது. சற்று ஆழமாக சென்று மாணவர்களின் குடும்ப சூழல் அவர்கள் சந்திக்கும் பிரச்சனைகள் அவர்கள் உள்ளங்களில் தேங்கிக் கிடக்கும் ஆசைகள் எதிர்க்காலத்தை பற்றிய கனவுகள் அவர்கள் கொண்டிருக்கும் திறமைகள், பண்பு நலன்கள் போன்ற வற்றை நீங்கள் துல்லியமாக அறிந்திருத்தல் வேண்டும் இஃது நீங்கள் மாணவர்களோடு ஆழமான விதத்தில் உறவை ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அவர்களுக்கு வழிகாட்டவும் உதவும்.

**02**

## மாணவர்களை அன்பு செய்யுங்கள் :

உங்கள் வகுப்பிலுள்ள எல்லா மாணவரையும் நீங்கள் அன்பு செய்ய வேண்டும். அவர்களின் நிலைமையோடு ஏற்றுக் கொள்ள வேண்டும் அவர்கள் வாழ்வில் ஏற்படும் இன்பங்கள். துன்பங்கள், ஏற்றங்கள், ஏமாற்றங்கள், உயர்வுகள், தாழ்வுகள் அனைத்திலும் உங்களையே நீங்கள் இணைத்து கொள்ள வேண்டும். உங்கள் ஒவ்வொரு பார்வையிலும் பேச்சிலும். செயலிலும், பரிவும், பாசமும், வெளிப்பட வேண்டும். உங்கள் அன்பு வகுப்பறையின் நான்கு சுவர்களுக்குள் மட்டும் முடங்கிவிடக்கூடாது. மறைக்கல்வி வகுப்பு முடிந்த பின்னும் இருக்கின்றேனா ? மக்களுக்காக உழைக்கின்றேனா? நான் செய்பவை அனைத்தும் கடவுளின் விருப்பமா? என்ற வினாக்களை தொடுத்து அவற்றிற்கு பதில் கண்டு அதற்கேற்ப எனது வாழ்வை அமைத்துக் கொள்வதால் நான் மகிழ்ச்சியோடு வாழ்ந்து கொண்டிருக்கிறேன் நான் அதிருப்திதயாய் இருந்ததே இல்லை எந்நாளும் மனக்கசப்பு அடைந்தில்லை. ஆண்டவருக்குள் என்றும் மகிழ்ச்சிக் கொள்ளுங்கள் என்று புனித பவுல் அடியார் கூறுவது போல நான் மகிழ்ச்சியை கடவுளிடம் தேடுவதினாலே அதை யாரும் என்னிடமிருந்து பறிக்க முடியாது.

**03**

## வகுப்பறையில் யதார்த்த சூழ்நிலையை உருவாக்குங்கள் :

மாணவர்கள் தங்கள் உணர்வுகளையும் உள்ளக்குமுரல்களையும் ஒருவருக்கு ஒருவர் பகிர்ந்து கொள்ளக்கூடிய யதார்த்தமான சூழ்நிலையை உருவாக்குங்கள் அவர்களிடையே திறந்த மனநிலையை ஏற்படுத்துங்கள். அச்சத்தை தவிர்த்து மாணவர்கள் உங்களை பற்றுடனும் பாசத்துடனும் அணுகவேண்டும். வகுப்பறையில் யாராவது ஒரு மாணவன் புதிய கருத்தையோ மாற்றுச் சிந்தனையையோ வெளிப்படுத்தினால் திறந்த மனதோடு ஏற்றுக் கொள்ளுங்கள். அதே வேளையில் தவறான கருத்துகளுக்கும், கண்ணோட்டங்களுக்கும் தகுந்த விளக்கம் கூறி உண்மை நிலையைத் தெளிவு படுத்துங்கள்.

**04**

## காலத்தின் அறிகுறிகளை கண்முன் கொள்ளுங்கள் :

மறைக்கல்வி வாழ்வோடு ஒட்டியது. விசுவாச வாழ்வு என்பது ஏதோ ஆகாயத்தில் தொங்கி கொண்டிருப்பது அன்று வெறும் கருத்தியலுமன்று காலத்தின் அறிகுறிகளாக மனிதரின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகளோடும் பின்னிப் பிணைந்தது. அவற்றிற்குப் புதுப் பொருள் தருவது அவற்றை உறுதிப்பாட்டுடன் சந்திப்பதற்கு ஆற்றலைக் கொடுப்பது. எனவே தான் மறைக்கல்வி வகுப்பை அன்றாட வாழ்க்கை அனுபவங்களை பகிர்ந்து கொள்வதோடு தொடங்க வேண்டு. வகுப்பு முடிவில் மாணவர்கள் புதிய மனநிலையையும் மதிப்பீடுகளையும் பெற்றவர்களாய் மீண்டும் தங்கள் வாழ்க்கை சூழ்நிலைக்கு திரும்ப வேண்டும். ஆதலால் மாணவர்கள் வாழும் சமுதாய சூழ்நிலை எத்தகையது என்பது பற்றி அவர்களுக்கு தெளிவுபடுத்துங்கள். அவற்றை அலசிப் பார்க்க உதவுங்கள். சமுதாயத்தை சீரழிவின் பாதைக்கு இட்டு செல்லுகின்ற சாதிவெறி, பெண்ணடிமைத்தனம், வறுமை, போன்ற தீமைகளை இனங்கண்டு கொள்ளவும். அவற்றை எதிர்த்துப் போராடவும் மாணவருக்கு வழிகாட்டுங்கள்.

( அடுத்த இதழில் தொடரும் )

## பேசாலைச் சிறார்களின் யாத்திரைப் பயணம்

பேசாலைப் பங்கின் திருப்பாலத்துவ சிறார்களில் 290 பாலர்கள் தமது யாத்திரைப் பயணமொன்றை மேற்கொண்டு தோட்டவெளி மறைசாட்சிகள் ஆலயத்திற்குச் சென்றனர். இத்திரு யாத்திரை ஐப்பசித் திங்கள் 05 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. காலை 9.30 மணியளவில் பேசாலை ஆலயவளவில் ஒன்று கூடிய சிறார்கள் ஊக்குவிப்பளர் பத்துப் பேரின் வழிநடத்தலின் கீழ் யாத்திரைப் பயணத்தை ஆரம்பித்தனர்.

தோட்டவெளி அனுபவம் பலருக்கு புதியது. ஆலயத்தை அடைந்தவுடன் ஆண்டவனை வழிபட்டு விட்டு பாடசாலை மண்டபத்தில் ஒன்று கூடினர். பேசாலைப் பங்குத்தந்தை அருட்திரு பி. யேசுறாஜா அடிகள் மற்றும் பலரது அறிவுரைகளைத் தொடர்ந்து சிறார்கள் தாம் கொணார்ந்த மதிய உணவு பொதிகளை மரங்களின் கீழ் குழுக்களாக உட்கார்ந்து உண்டனர். மதிய உணவை அடுத்து சில விவிலிய கலை நிகழ்வுகளை நடாத்தி தோட்டவெளி திருப்பாலத்துவ சிறார்களை உற்சாகப்படுத்தினர். தோட்ட வெளிப்பங்குத் தந்தை அருட்திரு எ. செபமாலை மற்றும் பேசாலை உதவிப் பங்குக்குரு அருட்தந்தை ஜி. அருள்பிரகாசம் ஆகியோரின் அறிவுரைகளைத் தொடர்ந்து சிறார்கள் தமது யாத்திரையை தோட்டவெளியில் முடித்துக் கொண்டு மாலை 4 மணியளவில் வீடு நோக்கிப் புறப்பட்டனர். இத்திரு யாத்திரையானது மிகவும் பலன் அளித்ததென பல சிறார்களும் கூறினர்.

தகவல்
செல்வன் சூ.புறுனோடயஸ்
பேசாலை.

## அன்பியத்தில் உறையும் இறைகுலம் :-

ஆதிவாழ் கிறிஸ்தவரின் அன்பு மிகு வாழ்வுதனை
சோதியாய் கேட்டு யாம் சிந்தையில் கொண்டிடுவோம்
நீதி மிகு தேவனை நெஞ்சமதில் கொண்டவர்
சாதி குல பேதமின்றி சமத்துவமாய் வாழ்ந்தனரே.

ஒன்றாய் கூடியே ஒருமித்த மனத்தோடு
அன்பு மிகு சமூகமதை அமைத்தே வாழ்வுதனில்
இன்பமும் பழகியே இன்னலெதுவுமின்றியே
என்றுமவர் வாழ்வுதனை எண்ணிப்பார் மனிதனே.

இருப்பவை அனைத்தையும் ஒருமித்த மனத்தோடு
கருத்துடன் அனைத்தையும் சரிசம னாக்கியே
விருப்புடன் மற்றவர் தமக்குள் பகிர்ந்தே
செருக்கின்றி நட்புடன் சிறப்புற வாழ்ந்தனரே.

ஆண்டவர் போதனையை ஆர்வமுடன் கேட்பதிலும்
வேண்டிய போதெல்லாம் விருந்துண்டு மகிழ்வதிலும்
மீண்டும் ஒன்றாய் கூடிக் குழுமியவர்
காண்கிற இன்பம் வேறெதிலு முண்டோ.

நாகரீக நவயுகத்தில் வாழ்கின்ற மனிதா நீ
பாகம் பிரித்தே பதவி சுகம் காணும் வரை
போக வாழ்க்கை போதுமினி என்றே நீயும்
வேகம் மிகவே விரைந்திடு இன்றே.........

தாயெனும் திருச்சபையின் அன்பியம் என்கின்ற
ஆயரின் அழைப்பிற்கு அணிவகுத்து வாரீர்
சேயர் நாம் ஒன்றாய் சேர்ந்து கை கோர்த்தே
நேயமுடன் கிறிஸ்துவில் இணைந்தே யாம் வாழ்ந்திடுவோம்.

அருள் சீலன்ராஜீ பீரிஸ்
தாழ்வு பாடு.

இப்பத்திரிக்கை மன்னார் மறைவட்ட அன்பியத் தொடர்பகத்தால் கொழும்பு 13 லங்கா பப்ளிஸிங் ஹவுஸ் மேற் பார்வையில் அச்சிடப்பட்டது.

## சமாதானம்



உலகமெனும் உருண்டையிலே
உருண்டோடும் வாழ்க்கையிலே
உலவுகின்ற மாந்தர் எல்லோர்
விரும்புகின்ற ஓர் தானம் - சமாதானம்

கோடி கோடி சொத்திருந்தும்
சொந்த மிருந்தும் பந்தமிருந்தும்
சொகுசான வாழ்விருந்தும்
பயன் ஏதோ இன்றேல் - சமாதானம்

இலங்கையெனும் எம் நாட்டில்
உயர்ந்த பெரு மலைகளுண்டு
அடர்ந்த பெரு வனங்களுண்டு
செழிப்பு மிக்க வளங்களுண்டு
இருந்தென்ன பயன் ஈழநாட்டிலில்லை - சமாதானம்

வாழுகின்ற வயதினிலே வாழ்விழந்தோர் பலர்
துன்பம் எனும் துயர் குழியில் துடிதுடிப்போர் பலர்
உரிமையில்லை உறக்கமில்லை
உணர்வுகளின்று உறைந்திட்ட நிலை இல்லை
இதனால் - சமாதானம்

அதிகாரம் ஒழிந்து ஆணவம் மறைந்து
சமரசம் தேவை சாந்தியும் தேவை
அமைதியின் மடியில் அகிலமும் திளைக்க
அவசியம் தேவை - சமாதானம்

உங்களுக்கு சமாதானம் உரைத்திட்ட
பெருமான் இயேசு வழிதனிற் சென்று
ஒருவருக்கொருவர் கொண்டிங்கு
வாழ்வோம் - சமாதானம்.

சூ. லக்ஸ்மன் றோசாய்ரோலோகு
மன்/ பத்திமா.ம.ம.வி
பேசாலை.

## அரிப்புப் பங்குச் செய்தி

அரிப்புப் பங்கின் பங்குத்தந்தையாக அருட்பணி மாக்கஸ் அடிகளார் 21.09.97 ஞாயிறுமாலை திருப்பலியுடன் பங்கை பொறுபபேற்று க் கொண்டார். அன்றைய நன் நாளில் அருட்தந்தையுடன் முன்னை நாள் பங்குத்தந்தை அருட்பணி ஸ்ரீபன்ராஜ் அடிகளும் வாழ்வுதய இயக்குனர் அருட்பணி எமிலியானு ஸ் பிள்ளை அவர்களும் முருங்கன் பங்குத்தந்தை அருட்பணி விக்ரர் சோசை, தாழ்வுபாட்டு அருட்பணி பீற்றர் மனோகரன், அருட்பணி லொசிங்ரன் அ.ம.தி அடிகளாரும் பங்குப் பொறு ப்பேற்றல் திருப்பலியை சிறப்பித்தார்கள்.

திருமறைப்பணி நிலைய சுற்று நிரூபத்திற்கமைய 5-12ம் திகதி வரை மறைக்கல்வி தினம் அனு ஸ்டிக்கப்பட்டது. மாணவர்கள் பயன் பெறும் வகையில் படக்காட்சிகள் (மறைதொடர்பான) விவிலிய விளையாட்டுக்கள் கலை நிகழ்வுகள் என்பன இடம் பெற்றன.

மறையாசிரியர்களுக்கான ஒருநாள் தியானம் மறைப்பணியாளர்கள் பங்கிராஸ் சவிரி, செபஸ்தியான்பிள்ளை ஆகியோரால் இணைந்து நடாத்தப்பட்டது.

பி.தேவபாலன் பெனாண்டோ
மறையாசிரியர்
அரிப்புத் து றை.

## மன்னா பற்றிய உங்களுடைய கருத்துக்கள்

மன்னா பற்றிய உங்களுடைய எண்ணங்களை,
கருத்துக்களை எதிர் பார்க்கின்றோம்
ஆக்கங்கள், பங்குச்செய்திகள் அனைத்தையும் அனுப்பலாம்

தொடர்புகளுக்கு : மன்னா
அன்பியத் தொடர்பகம்
புனித வளன் திருமறைப்பணி நிலையம்
மன்னார்.

மன்னா உங்கள் பத்திரிகை அதன் வளர்ச்சியும்
தளர்ச்சியும் உங்கள் கரங்களில்